


# காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 சித்திரை 8 (21-4-74) | இதழ்: 40


★


உள்ளே......

பாதி வழியில்...!
(அறிஞர் அண்ணா)

★

மாநிலங்கள் மத்திய அரசை அண்டி நிற்கும்நிலை களையப்பட வேண்டும்!

★

விடுத்தானே? பிடித்தானே?
(இலக்கியம்)

★

எனது நன்றிக்குரியவர்கள்
(சிறுகதை)


★

## "உயிர் எதற்கடா...?"

(வலசை. ப. கணேசன்)

உணர்வு கொள்ளடா—தம்பி
உடன் கிளம்படா—தமிழ்
இனப் பகைவர்
எவரெனினும் எதிர்த்து நில்லடா (உணர்வு...)

அறிவைப் போற்றுவோம்—உயர்
அன்பைப் போற்றுவோம்—தூய
நெறியைக் காத்து
நாட்டைக் காத்து
மொழியைப் போற்றுவோம்—தாய்
மொழியைப் போற்றுவோம் (உணர்வு...)

உயர்ந்து நில்லடா—தினம்
உண்மை சொல்லடா—வீண்
பயத்தைப் போக்கி
பண்பை போற்றி
பகையை வெல்லடா—தமிழ்ப்
பகையை வெல்லடா (உணர்வு...)

உணர்ந்து செல்லடா—நன்
குணர்ந்து செல்லடா—நம்
இனத்தைப் பழிக்கும்
இழிவைக் கண்டும்
உறக்கம் ஏனடா?—நின்
உயிரும் எதற்கடா? (உணர்வு...)

விலை: 0-25 காசு

# விடுத்தானோ? பிடித்தானோ?

அவள் பூப்படையாப் பருவத்துப் பிஞ்சாக இருந்தபோதே, அவளை நெஞ்சத்துக் காப்பிலிட்டுக் காத்திருந்தான் காளை அவன். பூத்த புது மலரானாள் பாவை. பூத்தோண்டும் வண்டானான் காளை. பார்த்திருந்தவளும் காத்திருந்தவனும் மாலைமாற்றிக் கொண்டனர். மனையறம் புகுந்தனர். காளையின் மனதில் நேரத்திற்கொரு ஆசை, நிமிடத்திற்கு ஒரு கற்பனை; குடத்தேன் என்பான். இல்லை! இல்லை! குடித்தால் முடிந்து விடுவதாயிற்றே குடத்தேன்! குடித்தால் 'முடியாத இடைத்தேன்' உடையாளைக் குடத்தேன் என்றேனே! நானோர் கொடும்பாவி! என்று தன்னைத்தானே நொந்துகொள்வான். கண்மூடிப் படுத்திருப்பான் படுக்கையில்! கிடைத்திருக்கும் ஒரு உவமை. கிடைத்த உவமைதனை எடுத்து வந்து தொடுக்க வருவான் கவிதை; தோகைக்கு உவமையாக. அவளழகைக் கவிதையிலே அடுக்கி அடுக்கி உவமைதனை எடுத்துத் தொடுக்க வரும்போது, இல்லை இல்லை! நானந்தத் தோகைக்கு உவமையில்லை எனச் சொல்லி எடுக்குமே ஓட்டம்! முடிப்பின்றி முடியும் அவன் கவிதை! எந்த உவமையைத் தொடுக்க நினைத்தாலும் அந்த உவமைகள் எடுப்பற்றுப் போகும் அவளழகுத் தொகுப்பின் முன்னால்!

முதல் நாளும் வந்தது. அறைக் கதவும் திறந்தது. பாவையின் மனக்கதவும் திறந்தது. துகிற் கதவு அன்றிப் பிற துணைக் கதவு அத்தனையும் திறந்தன. அகிற் புகை போன்ற ஆடையை முகில் போல் தவழும் பெண்மை உடுத்திருந்தது. முகை நெகிழா முல்லை மொட்டுகள் அவள் பல்லோடு போட்டியிட்டுத் தோற்றதால் பகைகொண்டது. எம் தலைவியோடா பகை கொண்டாய்! எனக் கேட்டுத் தென்றல்' முகை அவிழா முல்லை மொட்டுகளை மோதியது. பகைவிட்டேன் என்பதுபோல் மொட்டுகள் வாய்விட்டு இதழ் விரித்துத், தோற்றதற்குத் திரையாக மணம் பரப்பியது. அகிற் புகையனைய துகில் முனையை மெள்ளப் பற்றினான்; நாணமும் அவளைப் பற்றியது. கவிதையே! இசையே! நீ நின் செவ்விதழ் திறந்து என் செவியில் தேன் மழை பொழி என்று வாய்மூடும் முன்னே...பகையரசின் பகைமுரசு அவன் காதுகளில் ஒலித்தது, வானைப் பார்த்துத் தேன்மழை பொழி என்றான்! தேன் மழையா தேவை! இதோ பொழிகிறேன் நான் என்று வான், தீ மழை பொழிந்தால் எப்படியிருக்குமோ அப்படிபட்ட நிலை அவனுக்கு.

மாதரசியின் அணைப்பைக் காட்டி, வா என்றது அறை! மறக்குலத்தின் பெருமை காட்டி வா என்றது பறை! நாடு வென்றால் ஏடு புகழும் போ என்றது மறை! பகையரசர் அழைப்பினை ஏற்றான். பார் புகழக் களம் வெல்வேன்எனச் சூளுரைத்தான்! களத்திலே மணக்கப் போகும் வெற்றி மகளை மனத்திலே எண்ணினான். வேதனை இருள் அகன்றது. வீரக் கதவு திறந்தது. வெற்றியொளி பிறந்தது.

நிலமகளை அதிரடித்து' வெற்றி மகளை நினைவிருத்தி, வீரமகளைத் துணையழைத்துக் களம் போனான் காளை. பகை என்ற சொல்லேற்றி வந்த வகை வகையான பகையினத்தைத் தொகை தொகையாய்க் கைவேலேற்றிச் சாய்த்தான் காளை. பகைவர் மார்பில் செங்குருதி பொங்கருவியாகியது. பொங்கிவரும் செங்குருதிப் புத்தாற்றில்; பொன் பூத்த முடிபூண்ட மன்னர்தம் தலைகள்; மின் பூத்த வானம்போல், மண்ணில் பொன்பூத்த பொன்னி வளநதியில் வெண்பூ பூத்த நுரைக்கூட்டமென மிதந்தன.

பகையைத்தோளினால் வீழ்த்தி, வெற்றி எனும் தமிழர் பண்பைத் தடந்தோளில் ஏற்றி! அடலேறோ? அன்றி அரிமாவோ? இவன் எனக் கண்டோர் வியப்பெய்த நடைபோட்டான் வீரன்.

பகை வேலால் புண்பூத்த நெஞ்சோடும்! அப்பகையை வென்றதனால் புகழ்பூத்த தோளோடும்! அழகு தளிரதனைக் காணப்போவதனால் ஒளிபூத்த கண்ணோடும்! நெஞ்சில் ஊற்றெடுக்கும் கற்பனையால் நகை பூத்த முகத்தோடும்! அவன் நடந்தான் அவளை எண்ணி!

வருகின்ற வழியில் தன்னிலை திரியாத் தண்டமிழ் பாவை காவிரியைக் கண்டான்! வெற்றி கொண்டு வருகின்ற காதலனை வீறுகொண்டு தழுவவரும் பாவையைப்போல் காவிரி வந்தது. பொங்கி வரும் நுரைகளோடும் கொம்போடும் கொத்தோடும் பூங்கொம்புகளையும் ஏந்தி வந்தது. களம் நோக்கிச் செல்கின்றவனை மாலையிட்டு அனுப்புகின்ற தமிழ்மரபைக் காவிரியின் கரை நின்ற கனி மரமும் பூங்கொடியும காப்பதுபோல்; காவிரித்தாயே நீர்தந்த நீ! நாங்கள் தருகின்ற கனியையும் பூவையும் ஏற்றுக்கொள் என்பதுபோல் மலரும் கனியும் உதிர்த்து நின்றன மரமும் கொடியும்.

மலர்சூடிக் கனி ஏந்திவரும் காவிரியைக் கண்டபோது அவனுக்குத் தன் காதலியின் நினைவு வந்தது. காவிரியின் நீர்ச் சுழற்சிகளை காண்கின்றபோது தன் காதலி சிரிக்கின்றபோது அவள் கன்னத்தில் விழுகின்ற குழிபோல் தோன்றியது. காவிரியைக் கண்டபோது தன் காதலி நினைவு அவனைத் தூண்டியது. கடுகி நடந்தான் இல்லம் நோக்கி!

இல்லம் நுழைந்தான். எழிலை அழைத்தான். இடை நெளிவு இசை பாட, கண்ணசைவு கவிகள் பாட, மென்துகில் காற்றிலாட, முடியாக் குழல்கள் முகில்போலாட நொடிக்கு நொடி ஓரழகைக்

[4:ஆம் பக்கம் பார்க்க]

ந. இறைவன், பிஏ.,



# மாநிலங்கள் மத்திய அரசை அண்டிநிற்கும் நிலை களையப்படவேண்டும்!

## தோழமைத் தொடர்பு பயன்மிக்கதாக வேண்டும்!

நமது கூட்டாட்சி அமைப்பில் (Federal set up) எத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டு மாநில அரசுகள் இயங்க வேண்டியுள்ளன என்பதை நாட்டத்திற் கொள்ளுதல் வேண்டும்.

அரசியலமைப்பில் விதித்துறைகள் மத்திய அரசுக்கு ஊட்டங் கொடுக்கும் முறையிலே அமைந்திருப்பது ஒருபுறமிருக்க, கடந்த பதினைந்து ஆண்டுகளாக திட்டமிட்ட பொருளாதார அமைப்பின்கீழ் எழுந்த நெறிமுறைகளும், வளர்ந்த மரபுகளும் மாநிலங்களை, மெலியச் செய்து மத்திய அரசினை மேலும் வலுவூட்டும் போக்கில் அமைந்துள்ளன.

அயல்நாட்டு வாணிபம், நாணயச் செலாவணிக் கொள்கை, கடன் கொள்கை முதலியன குறித்து, அரசியலமைப்பில் வகை செய்துள்ள அதிகாரங்களின் கீழ், நமது பொருளாதாரம் முழுவதையுமே நெறிப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசிற்கே உரியதாக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசியலமைப்பில் குறிப்பிட்டுக் கூறப்படாத எஞ்சிய வரி விதிப்பு அதிகாரங்கள் (Residuary powers) உட்பட, நீட்சித் திறன் பெற்ற வருமான இனங்களின் மீது மத்திய அரசிற்குள்ள, உரிமை வாய்ப்பின் மூலமும், தேசிய வருமான பெருக்கத்தின் பெருமளவு பங்கினை ஈர்த்துச் செல்லும் நிலையிலே அது உள்ளது.

இந்நிலைமை காரணமாக மாநிலங்கள் தங்கள் திட்டங்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசின் விருப்பக் (Discretionary) கடன்களையும், உதவி மானியங்களையும் எதிர்நோக்கி நிற்கும் நிலையில் உள்ளன.

பொதுக் கடன்கள் மூலம் மாநில அரசுகள் நிதி திரட்டி, தங்கள் நிதி வளத்தைப் பெருக்கிக் கொள்வதிலும், அரசியலமைப்பின் 293வது பிரிவில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம் நேரடியாகவும் ரிசர்வ் பாங்கியின் மூலம் மறைமுகமாகவும், அக்கடன்கள் எந்த நிபந்தனைகளுக்கும் வரையறைகட்கும் உட்பட்டுத் திரட்டப்படலாம் என கட்டுப்படுத்தும் உரிமையுடன் மத்திய அரசு விளங்குகிறது.

ஐந்தாண்டுகட்கு ஒருமுறை மாநிலங்களின் நிதித் தேவைகளைப்பற்றி நிதிக் குழுக்களின் வாயிலாக நடுவு நிலையில் நின்று ஆராய வேண்டுமென்கிற ஏற்பாடும், அக்குழுக்களின் ஆய்வு வரம்பு குறித்து விதிக்கப்படும், பல்வேறு வரையரைகள் காரணமாக, மாநிலங்கள் மத்திய அரசினை அண்டி நிற்கும் நிலைபெருமளவில் குறைந்த பாடில்லை.

### டாக்டர். ஏ. எல். முதலியார் மறைவு!

**மாமேதை டாக்டர். ஏ. லட்சுமணசாமி முதலியார் 15-4-74 நள்ளிரவு தமது 87-வது வயதில் மறைவெய்தினார். அவருடைய மறைவு நாட்டுக்கு அதிர்ச்சி தரக்கூடியது. சிறந்த கல்வியாளரான அவர் 27 ஆண்டு காலம் சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தராக பணியாற்றி இருக்கிறார். அறிஞர் பெருந்தகை, அரசியல் மேதை சர். ஏ. ராமசாமியின் இளவல் மறைந்த மேதை ஏ. ஏல். முதலியார் பேரறிஞர் அண்ணாவிடமும் அவர் நிறுவிய கழக அரசின் பாலும் மிகுந்த பற்று கொண்டிருந்தார். அன்னார் மறைவை குறித்து "காஞ்சி" தன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறது.**

—ஆசிரியர், "காஞ்சி"

மத்திய–மாநில அரசுகளுக்கிடையே உள்ள தொடர்புகள் பற்றிய மறு சிந்தனை தேவை என்பதனை, இப்பேரவை அறியும், இன்றுள்ள உறவு, உள்ளத்துக்கு நிறை தருவதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தை அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதுவரை வரிப்பங்கீடு, அதிகார வரம்பு, திட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவற்றிலே கிடைத்துள்ள அனுபவம், கசப்பு நிரம்பியதாக இருப்பதை எவரும் மறுத்திட இயலாது; இந்தக் கசப்பு நீங்கிடவும், கனிவு கிடைத்திடவுமான முறையில் தொடர்புகள் அமைந்திட வழி காண்பது உடனடிப் பிரச்சனையாகி விட்டிருக்கிறது. இது குறித்து அச்சமோ, ஐயப்பாடோ அல்ல, தெளிவான சிந்தனையே தேவை. ஒருவருக்கொருவர் உள்ள நல்லெண்ணத்திலும் ஒருவரையொருவர் நன்கறிவதாலும், தோழமைத் தொடர்பு மகிழ்ச்சியும் பயனும் மிக்கதாக ஆக்கப்படவேண்டும் என்பதே எனது அவாவாகும்.

—**1967-68** ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிஞர் அண்ணா கருத்துரை.

**விடுத்தானோ? பிடித்தானோ?** [2-ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொன்று, மறு அழகைத் தோற்றுவிக்கும் அந்த அழகின் ஊற்றும் அன்னம் மென்நடை பயின்று வந்தது. காளையைக் கண்டாள். நாணத்தைப் பூண்ட பளிங்கு சிலையானாள் பாவை பளிங்கு சிலையா? அல்லது பாவையா? என அவன் அறிந்ததே இமைக்கு இமை நாணத்தால் சிவப்பேறிய அவளது கன்னத்தின் துணைகொண்டுதானே! கன்னம் மட்டும் சிவப்பேறாமல் இருந்திருந்தால் வீட்டில் அலங்காரத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பளிங்கு சிலைகளில் அவளும் ஒன்றென்றே எண்ணியிருப்பான்.

தன் கைவேல் பாய்ச்சியதால் பகை நெஞ்சில் பொங்கும் செங்குருதி கண்டபோதே, அவன் நினைவலையில் மிதந்து மிதந்து வந்த எண்ணம் பாவையரின் தேன் தூங்கும் கனியிதழ்தானே களம்! அங்கேயோ முல்லை சூடிய செல்வியரின் முறுவலைக் காணவே முடியாது. அங்கேயே இவன் நினைவில் மிதந்து மிதந்து வந்தது இந்தப் பாவையின் செவ்விதழ் செங்கனிதானென்றால்; அவன் முன்னால் அந்த அழகு மயில் வந்து தோகை விரித்து நிற்கின்ற போது; அவன் நெஞ்சைக் கிளறாத கற்பனையையும்; தேன் தோற்கும் கவிதை வரியையும் யாரே படைக்க வல்லார். அவள் முன்னால் நின்றால், இளங்கோவும் அவனே! அகம்பாடும் எழிற் கவிதை சங்கப் புலவர்களும் அவனன்றி வேறு யாரே உளர்!

மெள்ள இழுத்தான் மேலாடையை! அவள் பெண்ணாயிற்றே, நாணம் தேன் கூட்டு ஈயாகி அவளை மொய்த்தது. வாயைத் திறந்தாள் விடுமின் என்று சொல்ல! நாணத்தால் அவளுடைய இதழ்கள் அசைய மறுத்தன. நெடுநேரம் முயன்றதன் பின்னரே அவள் கனியிதழை முண்டி முட்டி அரையும் குறையுமாக விடுமின்! விடுமின்! என்ற சொற்கள் வெளிவந்தன. விடுமின்! விடுமின் என்றாளே தவிர...அவள் விடுவித்துக்கொள்ள முயற்சியெதுவும் செய்யவில்லை. விடுமின் என்றவுடன் அவன்தான் விட்டுவிட அவளென்ன வேண்டாத பொருளா?

களத்தில் முன்னேறிவரும் பகைவரைக் காட்டி, வேலையும் வில்லையும் விடுமின் விடுமின் என்று வீரர்கள் ஆர்பரிக்கக் கேட்டுக்கேட்டுச் செவி புளித்துவிட்டவன் அவன். இரத்தக்கறை படிந்த கைகளையுடைய வீரர்கள் விரும்பிச் சொல்கின்ற அந்தச் சொல்லை; நறுந்தேன் துளிக்கும் இவளது வாயுதிர்க்க நியாயமில்லை என்று நிச்சயமாக நம்பினான். வருந்தும் இடையுடைய இவள் ஏன் விடுமின் விடுமின் என்று சொல்லியிருக்கப் போகிறாள். என் காதுகள்தான் கோளாறு உடையனவாக இருக்கும்...விடுமின் விடுமின் என்ற சொல்லையே கேட்டுக்கேட்டுப் பழக்கப்பட்டுவிட்டதால்......அவள் தொடுமின் தொடுமின் என்றிருந்தால்கூட அது என் செவிகளில் விடுமின் விடுமின் என்று விழுந்திருக்கக்கூடும்... அப்படியே விடுமின் விடுமின் என்று அவள் சொல்லியிருப்பாளேயானால், அவள் ஏன் என் பிடியிலிருந்து நழுவி ஓடவில்லை என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டான் தனக்குத்தானே! அப்பவும் அவன் அமைதி அடையவில்லை. மீண்டும் அவளைப் பார்த்தபடி இருந்தான்!

அவளும் நின்றபடி இருந்தாள்—அவளை உற்று நோக்கியபோது அவனுக்கு ஒரு தெளிவு பிறந்தது. அவளைப் பார்த்தபடி, வளையணிந்த கொடியவளின் கைகளை இழுத்தப்படி தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

இடை சிறுத்ததால் இவள் தனம் பெருத்ததோ? அன்றி தனம் பெருத்ததால் தையல் இவள் இடை சிறுத்ததோ? என்று அவன் எண்ணும்படி அவள் நின்றாள்.

தனம் பெருத்ததால் இடை சிறுத்ததோ எனப் பார்ப்பவர்கள் வியக்கும் இந்தப் பருவ எழில் பூத்துச் செழிக்கும் புதுமலர் இவள் ஏன் விடுமின் விடுமின் என்று சொல்லியிருக்கப் போகிறாள். அதுவுமின்றி நீண்ட நாட்களாக எனை நினைந்து ஏங்கிக்கிடந்த இவள் விடுமின் விடுமின் எனச் சொல்லியிருக்க முடியாது என நினைத்தான்!

தனத்தின் பளுவை நெடுநாட்களாய்த் தாங்கி தாங்கி என் இடை மெலிந்துவிட்டது. வந்துவிட்டீர். இனியேனும் பிடிமின்! பிடிமின்!! இடை ஒடியு முன்னே அதைப் பிடிமின்! பிடிமின்!! என்றுதான் இவள் சொல்லியிருப்பாள் என எண்ணினான்!

அவள் சொல்லியபடி ஆடையை விட்டுவிட்டானோ? அன்றி அவன் நினைத்தபடியே இடையை ஒடியாமல் காக்க அந்த இடையையே தாங்கினானோ! இல்லை! இடையால் தாங்கமுடியாத அந்த இளம் உள்ளத்தாளை இந்த ஆடைவேறு ஏன் வருத்துகிறது என்றேங்கி இடையாடையை எடுத்தெறிந்தானோ? என்ற விளக்கங்களை எல்லாம் நமக்குத் தோன்றியபடி நாமேதந்து கொள்ளச்சொல்லி பாடலை முடித்துவிட்டான் அந்தப் படுபாவி கவிஞன். அவனே அவனது மொழியில் மிச்சத்தையும் சொச்சத்தையும் புனையாமல் போனானே என்று நாமெல்லாம் வருந்துகிறோம். யாரவன்? எங்கே அந்தக் கவிஞன் என்று கேட்கிறீர்களா?

இதோ! இதோ! அந்த கவிஞன்! எங்கும் உளதண்முகம் என்று கோதையர் முகங்களைப் பாடி வாலிபர் உள்ளங்களிலே ஏற்றிய சூடு தணியுமுன்னே அடுத்த அடியிலேயே எங்கும் உளபொங்கும் இளநீர் என்று காதல் தேன் சொட்டச் சொட்டக் கவிபாடி; நம்மையெல்லாம் சூடேற்றும் கவிஞன் செயங்கொண்டான் புன்முறுவலோடு நிற்கிறான். அவன் படைத்த தேனாற்றுத்தான் இதுவரை நீராடியது. இதோ அந்தத் தேனாற்று. சுவைமின்! சுவைமின்!! பாடல் :—

'விடுமின், எங்கள்துகில்
விடுமின்' என்றுமுனி
வெகுளி மென்குதலை, 'துகிலினைப்
பிடிமின்!' என்ற பொருள்
விளைய நின்று அருள்செய்
பெடைநலீர்! கடைகள் திறமினோ.

க. ப. பாடல் எண் 25.

★

# பாதி வழியில்...!

"நமது அரசியலமைப்பு, மாநில சட்டமன்றங்களின் அதிகாரங்களை; அதுவும், பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில், மிகமிகக் குறைத்து விட்டிருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்த நிலை, கூட்டாட்சி தத்துவத்திற்கு ஒவ்வாதது மட்டுமல்ல, பாராளுமன்ற முறைக்கே ஊறுதேட வல்லது. நாட்டு நலனுக்கேற்ற திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநிலங்களின் பொறுப்பு மேலும் மேலும் வளர்ந்து வருவதையும், பொறுப்பு வளர வளர, அரசியல் சட்டம் மாநிலங்களுக்கு வகுத்திருக்கும் எல்லைக் கோட்டை, அவைகள் அடிக்கடி மீறுவதையும், நாம் காண்கிறோம். இந்தப் பிரச்சினை சாதாரணமானதல்ல! இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைத்திட வேண்டுமானால், இதற்கோர் முடிவு கண்டாகவேண்டும்."

—இத்தகையதோர் கருத்து, நாம் சற்றும் எதிர்பாராத இடத்திலேயிருந்து வந்திருக்கிறது என்பதை எண்ணும்போது, உண்மையிலேயே நம் உள்ளத்தில் எல்லாம் மகிழ்ச்சி பிறக்கிறது.

இதே கருத்தினை, நானோ, நாவலர் நெடுஞ்செழியனோ — ............ கருணாநிதியோ — அன்பழகனோ மதியழகனோ—நடராஜனோ, மற்றும் பல கழகத் தோழர்களில் வேறெவரோ கூறியிருந்தால், அதிலே வியப்பதற்கொன்றுமில்லை — நாள்தோறும் நடைபெறுகின்ற நிகழ்ச்சி.

மத்திய அரசு மாநிலங்களை ஆட்டிப் படைக்கிறது—சூத்திரதாரிகள் டில்லியில்; சொகுசாக உலா வருகின்ற கொலுப்பொம்மைகள் இங்கே—என்று நாம் தினம்தினம் தான் சொல்லுகிறோம், ஆணித்திரமான ஆதாரங்களோடு!

இந்த அவல நிலையினை, ஆகாத முறையினை, அகற்றிட நாடு நமதாகவேண்டும், நமது நாடாம் திராவிடத்தின் ஆட்சி நம் கரத்திலே ஒப்படைக்கப் படல் வேண்டும் என்று வழிவகைகளையும், எடுத்துக் கூறுகிறோம், எதிர்ப்புகளையும் ஏளனங்களையும் பொருட்படுத்தாமல், எதையும் தாங்கிடும் இதயத்தினராக.

மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரம் போதாது—மத்திய அரசின் ஆணைக்கு அவை கட்டுப்பட்டு நடந்திடும் போக்கு ஆகாது. — இதற்கோர் மாற்றம் எம் முறையிலேனும் கண்டாக வேண்டும்—என்று நமது கழகத்தவர் எவரும் பேசுவதிலே வியப்பில்லை.

ஆனால் நாமெல்லாம் வியக்கத்தக்க வகையில் இந்தக் கருத்தினை வெளியிட்டிருப்பவர், ஒரு கம்யூனிஸ்டுத் தோழர்—வங்கத்தைச் சேர்ந்தவர்—பூபேஷ் குப்தா என்பார்!!

நாம் நாள்தோறும், செல்லுமிடமெல்லாம் சொல்லிவருகின்ற கருத்துக்கு, செஞ்சட்டை முகாமிலிருந்தே இத்தகையதோர் ஆதரவு கிடைத்திடுவது கண்டு நமக்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்படாமலிருக்க முடியாது.

காரணம், அவர்கள் தமது கருத்திற்கு மாறான எந்தக் கருத்தினையும் ஏற்றுப் பழக்கப்படாதவர்கள் —எதையும் எளிதில் 'பிற்போக்கு வாதம்' என்று பெயரிட்டுவிட்டு ஒதுக்கித் தள்ளிவிடுகின்ற சுபாவத்தினர்!!

இதே கருத்தினைத்தான் இன்னும் ஒருபடி சென்று, திராவிட முன்னேற்றக் கழகம் "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற கோரிக்கையின் மூலம் நாட்டு மக்கள் முன்னிலையில் வைத்து வருகின்றது.

அதை கம்யூனிஸ்டுக் கட்சியினர் அறியாதவரல்லர்; ஆனாலும் என்ன செய்தார்கள்?

ஆகா! நீங்கள் சொல்லுவது தான் சரி, இதோ நாங்களும் வருகின்றோம், நல்லதோர் காரணத்திற்காக, நியாயம் பெறுவதன் பொருட்டுப் போராடுக என்று கூறினார்கள்?

திராவிடமாம், ............ வடக்காம் தெற்காம், இவர்களுக்கென்ன புத்தி பேதலிப்பா என்று கேலி பேசினார்கள்! பாரதம் ஒன்றன்றோ, பாவிகளே; அதைத் துண்டாட நினைக்கின்றீரே, இது ஆகுமா, அடுக்குமா, என்று சென்றவிடமெல்லாம் நம்மைச் சாடினார்கள்!!

சாடியதோடு மட்டுமா! இந்தச் சண்டாளர்களை ஒழித்துக்கட்டிவிடுகிறோம் என்று தீர்மானமே நிறைவேற்றினார்கள், அமிர்தரஸ் மாநாட்டில்.

அந்த அளவுக்கு நம்மைச் சாடிய கூடாரத்திலே இருக்கின்ற ஒருவர், இந்த அளவுக்கு நம்மை நெருங்கி வந்திருக்கிறாரே என்பதை எண்ணும்போது நம்மையறியாமலே நமக்கு மகிழ்ச்சி பிறக்கிறது.

இந்த 'ஞானோதயம்' அவர்களுக்குத் திடீரென்று ஏற்பட்டதல்ல! கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சிப் பீடத்திலே அமர்த்தப்பட்ட நாள் முதல், மத்திய அரசு எந்த அளவு வலிவோடு திகழ்கிறது என்பதனையும், மாநிலங்கள் எந்த அளவு வலுவற்று,

எதற்கும் டில்லியின் கட்டளையை எதிர்பார்க்க வேண்டிய ஏளனமான நிலை இருந்து வருகின்றது என்பதனையும் அவர்கள் மெள்ள மெள்ள உணர்ந்து வருகின்றனர்.

கேரளத்து முதலமைச்சர் எதையெதையோ செய்ய நினைக்கிறார்—பற்பல சாதனைகளைப் புரிந்திட எண்ணுகிறார்—எத்தனிக்கிறார்—ஆனால் முடிவில் அவருக்குப் புரிகிறது, அவரது கரங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன என்பது!

ஆட்சிப்பீடம் ஏறிய நாள் முதல் அவர் பெற்றிருக்கின்ற அனுபவங்கள் மிகப்பல—அந்த அனுபவங்கள் நல்லபல படிப்பினைகளை அவருக்குத் தந்திருக்க வேண்டும்—அந்தப் படிப்பினைகளின் விளைவுதான் தோழர் பூபேஷ் குப்தாவின் கருத்துப்படையல்.

இந்த உண்மையினைக் கண்டுபிடிக்க கம்யூனிஸ்டுகளுக்கு, இவ்வளவு நாள் ஆகியிருக்க வேண்டியதில்லை—அரசியலமைப்பைப் பற்றிக் கருத்தறிவித்திருக்கின்ற அத்தனை பேரும் ஒருமுகமாக இதனை எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

ஆனாலும் இப்போதாவது அவர்கள் உணர்ந்தார்களே; குப்தா போன்றவர்கள் அதை வெளிப்படையாக விளக்கிடவும் துணிந்தனரே, என்று நாம் மகிழ்கின்றோம். மகிழ்ந்திடும்போது மற்றோர் உண்மையையும் நாம் மறந்துவிடக்கூடாது. மாநிலங்களுக்குப் போதிய அதிகாரங்கள் தரப்படவில்லை என்று தமது கட்சி ஏட்டிலே தீட்டிக் காட்டிவிட்டதாலே தோழர் குப்தாவோ, அவர்தம் கட்சியோ நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவு தருகிறது என்று பொருளல்ல — அவர்கள் இன்னமும் 'அகில இந்தியா'க்கள் தான்!

அவரோ, அவர் சார்ந்திருக்கின்ற கம்யூனிஸ்டுக் கட்சியோ 'சிறு மீன்களை'...விரும்புவதில்லை, 'உறுமீன்' வருமளவும் வாடியிருக்கச் சித்தமாயிருப்பவர்கள்!

ஆனாலும் நமக்கு, நியாயமானதோர் ஐயப்பாடு எழுகின்றது.

பாரதம் ஒன்றுதான் என்பதிலே அவர்களுக்கு உண்மை நம்பிக்கை இருக்குமானால், மத்திய அரசுக்கு எவ்வளவு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டால்தான் என்ன என்று பேசாமலல்லவா இருந்துவிடவேண்டும்? அதிகாரங்கள் அங்கே குவிக்கப்படுவதா என்று முணுமுணுப்பதிலே பொருளென்ன? பாரதம் ஒன்றுதான் என்று ஏற்றுக்கொண்டான பிறகு, பகுதிகளைப் பற்றிக் கவலைப்படுவானேன்? அவற்றின் அதிகாரங்கள் அளவுக்குமீறிக் குறைக்கப்பட்டுவிட்டன என்று குரலெழுப்புவானேன்? பாரதம் ஒன்றென்று ஏற்றுக்கொண்டால் மாநிலங்கள் வெறும் ஆட்சிச் சௌகரியத்திற்கென அமைக்கப்பட்டிருக்கின்ற பற்பல பகுதிகள் என்றுதானே கொண்டாக வேண்டும்!

நாட்டின் நலனுக்கான திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு மாநிலங்களுக்கு இருப்பதாலே, அவற்றிற்கு இன்னும் அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் வாதிடுவார்களானால், அந்தத் திட்டங்களை மத்திய அரசாங்கமே நிறைவேற்றிடலாமே, மாநில அரசுகளுக்கு அந்தப் பொறுப்புகள் ஏன், என்றொரு கேள்வி எழுப்பப்பட்டால் என்ன பதில் சொல்வார்கள்? மத்திய அரசாங்கத்திற்கு 'ஏஜண்டு'களாக மாநில அரசாங்கங்கள் இயங்குகின்றன என்று அவர்கள் வாதிட்டால், அத்தகைய ஏஜண்டுமுறை ஏன் என்று கேட்கப்படக்கூடுமல்லவா? திட்டங்கள் நிறைவேற்றப்படுவது தான் முக்கியமே தவிர, அவற்றை நிறைவேற்றுவதற்காக ஏஜண்டுகளை நியமிப்பதோ, அந்த ஏஜண்டுகளுக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று ஆராய்வதோ அல்லவே!

இதுபோன்ற கேள்விகள் எழுப்பப்பட்டால், கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு வேலை அதிகமாகிவிடும்—அவர்கள் தங்கள் இதயத்திலே இருக்கின்ற உண்மையை ஒளிவுமறைவின்றிச் சொல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்—எதனையும் மறைத்திட முடியாது!

அந்தச் சூழ்நிலையில் அவர்கள் இந்தத் துணைக் கண்டத்து வரலாறு முழுவதையும்—இன்று மாநிலங்களாக இருக்கின்ற பல்வேறுபட்ட பகுதிகளின் வரலாறு என்ன, அவை எந்தெந்த விதங்களில் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை, எந்தெந்தக் கால முதல் டில்லியோடு தொடர்புகொண்டவை, என்ற உண்மைகள் உட்பட—மக்களுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும்!

அங்ஙனம் எடுத்துச் சொல்லும்போது, அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இன்னமும் நெருங்கி வந்துவிடுவார்கள்-அது கூறிவருகின்ற கருத்தையே கூறவேண்டிய நிர்ப்பந்தத்திலே தள்ளப்படுவார்கள்!

எனவேதான், சாதுர்யமாக, குப்தா அவர்கள் அந்தப் பக்கமே திரும்பிப்பார்க்கவில்லை! மிகவும் எச்சரிக்கையோடு குறைபாடுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார், நிலைமை விளக்கம் தந்திருக்கிறார்—ஆனால் அந்த நிலைமையினைச் சீர்படுத்துவதற்கான வழி வகைகள் இவையிவை என்று ஆராய முற்பட்டாரில்லை-அந்த மகத்தான பொறுப்பை மக்களுக்கே விட்டுவிட்டு, மெள்ள நழுவி விட்டார்!

மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்பதுமட்டுமல்ல, இந்தத் துணைக்கண்டத்து அரசியலமைப்பில் அவர் காணுகின்ற குறைபாடு—இதோ மற்றொன்றையும் சுட்டிக் காட்டுகிறார்:-

"இந்திய அரசியலமைப்பு ஜனநாயக அமைப்புக்களுக்குப் பலதடைகளை ஏற்படுத்தியிருக்கிறது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை தரப்பட்டாலும், கட்சிகள் பெறுகின்ற வாக்குகளுக்கேற்ப, அவை சட்டமன்றங்களிலே அங்கம் வகித்திட முடிவதில்லை; காரணம், தேர்தல் முறையில் இருக்கின்ற கோளாறுதான்."

இந்த உண்மையினைத் திராவிட முன்னேற்றக் கழகமும் உணர்ந்திருக்கிறது, கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசு பெற்ற வாக்குகளில் மூன்றில் ஒருபங்கு வாக்குகளைப் பெற்றிருந்தும், சட்டமன்றத்தில் அது பெற்றிருக்கிற இடங்கள் 15—ஆனால் காங்கிரசுக்கட்சி பெற்றிருப்பதோ 150!

எனவே, குப்தா குறிப்பிடுகின்ற குறைபாடுகளனைத்தையும் நாம் உணருகிறோம்—அவை களையப்

படவேண்டியவைதான் என்பதையும் ஒப்புக் கொள்ளுகின்றோம்.

அதே சமயத்தில் நம் உள்ளத்தில் ஒரு கேள்வி எழுகின்றது "அவற்றைக் களைந்திடும் மார்க்கம் என்ன?" என்று!

அந்தக் கேள்வி எழுவதன் பயனாக, குப்தா காட்டுகின்ற வழி என்ன என்று துருவித் துருவிப் பார்க்கிறோம், முடிவில் ஏமாறுகிறோம்—காரணம், அவர் உருப்படியாக எந்த வழியையும் காட்டவில்லை. பிரச்சினைகளை அலசிக் காட்டியதோடு நின்று விட்டார்.

குறைபாடுகளை எடுத்துக் கூறியவர் அவற்றினைக் களைந்திடுவதற்கான வழிவகைகள் பற்பலவற்றை எடுத்துக்காட்டி, அவற்றிலே இவையிவை, இன்னின்ன வகைகளிலே ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதவை; இவையிவை நன்மை பயக்காதவை; இவையிவை ஜனநாயகத்திற்கு ஒவ்வாதவை, என்று வாதாடிவிட்டு, முடிவிலே ஒரு வழியினைக் காட்டி, இதுதான் சிறந்தது என்று கூறியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்!

ஆனால் அவர், தனது மனதுக்குத் தோன்றிய ஒரு பாதையைக் காட்டி, நாட்டிலே உள்ள கட்சிகளனைத்தையும் அந்தப் பாதையிலே வருமாறு வேண்டுகோள் விடுக்கிறார். இதோ அவர் வகுத்துத் தரும் பாதை:-

"இந்தப் பிரச்சினை கட்சி வேறுபாடுகளைக் கடந்தது—ஆனாலும் நாட்டுப் பற்றும் ஜனநாயகத்திலே நம்பிக்கையும் கொண்ட சக்திகளனைத்தையும் ஒன்று சேர்த்திடவல்லது. போராட்டம் நிகழ்த்தப்படவேண்டும், சட்டமன்றங்களுக்கு உள்ளேயும் வெளியேயும்!"

இது குறைபாடுகளைக் களைவதற்கான திட்டமா, அல்லது கம்யூனிஸ்டுகள் ஓட்டு வேட்டைக்காகச் செய்யவிரும்புகின்ற தகிடுதத்தமா?

"மகாஜனங்களே! இந்த நாட்டில் இத்தனை எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. இவையெதுவும் கண்டுபிடிக்காத ஒன்றை நாங்கள் கண்டுபிடித்தோம்—அவர்களால் சாதிக்கமுடியாததை நாங்கள் சாதித்தோம்! நாங்கள் துவங்கவில்லையென்றால், இந்தப் போராட்டம் நடைபெற்றிருக்க முடியுமா?" என்று பேசித் தேர்தல் காலத்தில் இலாபம் பெறக் கம்யூனிஸ்டுகளுக்கு, இந்தத் திட்டம் பயனளிக்கக் கூடுமே தவிர, உண்மையில், இருக்கின்ற குறைபாடுகளைப் போக்க எப்படி முடியும், இந்தப் போராட்டத்தின் மூலம்?

குப்தா எடுத்துக் காட்டியிருக்கின்ற குற்றச்சாட்டுகள் களையப்படவேண்டுமானால், அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்!

அரசியல் சட்டத்தைத் திருத்துவதென்பது சாதாரண விஷயமல்ல—ஆளும் கட்சியின் ஆதரவு இல்லையென்றால் அது எப்படிச் சாத்தியமாகும்?

சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி மேலவைத் தேர்தலில் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றிவாகை சூடிய

**பேராசிரியர் க. அறிவழகன், எம்.ஏ.,**

அவர்களுக்கு உளங்கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆசிரியர் நலன் நாடும் அறிவழகன் அவர்களின் தொண்டு மேலும் சிறக்க இதயத்தால் வாழ்த்துகின்றோம்.

—ஆசிரியர், காஞ்சி.

ஆளும் கட்சியின் ஆதரவு கிடைக்கவில்லையென்றால் என்ன செய்வது?

"பெரியதோர் போராட்டம், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து!!"

மிகப் பரந்த மனப்பான்மையோடுதான் திட்டம் தருகிறார், எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர வேண்டுமென்று! பாவம், அந்தக் கட்சிகளுக்கிடையே இருக்கின்ற பற்பல சிக்கல்களையும், போராட்டங்களையும், மனமாச்சரியங்களையும் மறந்துவிட்டார்!

அப்படியே கட்சிகள் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தி வெற்றி காண்பதாகவே வைத்துக் கொள்வோம்.

அரசியல் சட்டமும் திருத்தப்படுகிறது என்றும் ஒப்புக்கொள்வோம். அப்போது சேர்க்கப்படப் போகிற திருத்தங்கள் என்னென்ன?

மாநிலங்களுக்கு இப்போது இருக்கின்ற அதிகார வரம்பினை ஓரளவு விரிவுபடுத்துவதாலேயே பிரச்சினை தீர்ந்துவிடாதே!

விரும்பினால் பிரிந்துபோகின்ற உரிமை மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டாலொழிய, மத்திய அரசாங்கத்தினைக் கட்டுப்படுத்தக் கூடிய பயனுள்ள ஆயுதம் வேறென்ன?

அந்த ஆயுதத்தை மாநிலங்களின் கரத்திலே கொடுத்துவிடக் குப்தா ஒப்புக்கொள்ளுகிறாரா?

அவரை பொறுத்தவரை இந்தப் பாதை கல்லும் முள்ளும் நிறைந்தது, கரடு முரடானது மட்டுமல்ல, மிகவும் பயங்கரமானதும் கூட, ஆனாலும் என்ன செய்ய? 'பாதிவழி' வந்துவிட்டார்! இனித் தயங்கிப் பலனென்ன, போய்ச் சேரவேண்டிய இடத்தை நோக்கி விரைந்து செல்வதைத் தவிர!!

# எனது நன்றிக்குரியவர்கள்

**கஸ்தூரி நடராசன்**

## தாய் :—

இவள்தான் தன் பாலோடு எனக்குப் பாசத்தையும் ஊட்டி வளர்ப்பித்தவள். அன்பை போதித்தவள், பண்பை சொல்லித் தந்தவள். என் வளர்ச்சியில் ஒரு மறுமலர்ச்சியை காண நினைத்தது அவள் மனம். அந்த முயற்சியில் அன்பை ஊற்ருக அள்ளி அளித்திட்டாள். இவர்தான் உன் தந்தை. இவர்தான் உன்னை அவயத்து முந்தியிருக்க செய்யப்போகிருர் என்று என் தந்தையை அடையாளம் காட்டினர்கள்.

## தந்தை :—

கற்றுத் தெளிந்த நேர்மையைக் கடைபிடி - கற்றபடி நடந்துகாட்டு - நீதிக்காகப் போராடு - கயமைக்கு துணை நிற்காதே - நல்லதை செய் - இத்தனையையும் நீ பெறவேண்டுமானல் கல்வியறிவு வேண்டும் - ஆகவே இதோ உன் ஆசிரியன் என்று என் குருவை காட்டினர்.

## குரு :—

அவருக்கு இனம் தெரியாத என் கைகூப்பு = இந்த நிகழ்ச்சி வணங்கிப் போவதற்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட பாரம்பரியமாம். நானும் வணங்கினேன். உலகம் சமமானதல்ல. மலைகளும் உண்டு படுபாதாளங்களும் உண்டு. முக்கால் பாகம் நீரும் உண்டு நல்ல பாதைகளும் உண்டு, குறுக்காக நடந்து செல்லக்கூடிய கொடிய வழியும் உண்டு. பறப்பன உண்டு. ஊர்வன உண்டு, தத்தும்தவளைகளும் உண்டு, தாவும் குதிரைகளும் உண்டு, பயப்படும் பூனையும் உண்டு, பாய்ந்திடும் புலியும் உண்டு, அழகுள்ள ரோஜா மலரில் முள்ளை வைத்து அழகை குத்துகின்ற ஆபத்துண்டு, என்ற தத்துவத்தை ஆண்டவன் கற்பிக்கிருன். கள்ளியும் காளானும் ஆண்டவன் படைப்பே. இத்தனையும் படைத்த மனிதனை ஆறு அறிவு படைத்து அவனுடைய மனம் என்ற கையகலத்திலேயே வைத்து விட்டான். கடல் அளவில் ஆசைகளை வளர்த்து விடுகின்ற தன்மையும் படைத்து விட்டான். பள்ளத்தைப் பார்க்கின்ற கண்கள் தன் கால்களை அதில் விழச் செய்யாமல் காத்துக் கொள்ளக்கூடிய மனம் வேண்டும். மகிழ்ச்சியை எந்த உணர்ச்சியோடு மனம் சந்தித்து சதிராடுகிறதோ அதே நிலையில் எக்கத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்கின்ற பக்குவ மனம் பண்படுத்தப்பட்ட மனம் வேண்டும். இவைகளை பகுத்துணர்ந்து செயல்படும் அளவிற்கு பெயர்தான் பகுத்தறிவு என்ருர்.

நான்தான் ஒரு அரை குடம் ஆயிற்றே எனக்கு ஏதய்யா இவ்வளவு பகுத்தறியும் சக்தி? எனது கேள்வி.

அனுபவம் உன் வரவிற்காக காத்துக் கொண்டு இருக்கிறது என்கிருர் என் குரு. எங்கே இருக்கிறது ஐயா, அது? ஆர்வத்தோடு கேட்கிறேன்.

ஓய்வை நாடி நண்பனிடம் செல்கிறேன் - "புத்தகப் புழுவாய் இருந்தால் இப்படித்தான்" அனுபவம் என்ன என்றேன். ஆம் அது ஒரு புதிர். அது புகட்டும் பாடங்கள் அத்தனையும் புதுமையே என்ருன். நல்லவைகளும் அல்லவைகளும் இடம் பெற்று நியாயங்களை உணர்த்தும் ஒரு தத்துவப் பேராசிரியன். நண்பன் நிறுத்தினன்.

அது சரி, அதை அனுபவித்துத்தான் பார்க்க வேண்டுமா? வேறு எங்காவது கிடைத்தால் அறிந்து கொள்ளலாம் அல்லவா. என் மனம் ஒரு சாதாரண துணிச்சலை பெற்று விட்டது. புறப்பட்டேன், தேடிப் பார்த்தேன், விசாரித்தேன், விவரம் கிடைக்கவில்லை.

மீண்டும் நண்பனிடம் போனேன்- அனுபவங்களை எப்படிப் பெறுவது - என் கேள்வியை புதுப்பித்தேன். சிரித்தான் - அவன் அதோடு மட்டுமா விட்டான். சின்னவன் நீ என்ருன், அவன் சிரிப்பில் ஏதோ ஒரு அர்த்தம் இருக்கிறதென்கிற உண்மையை மட்டும் என் அறிவை தொடுகிறது. ஆனல் அந்த சிரிப்பின் முழுப் பொருளை தெரிந்துகொள்ள முடியாத குழந்தையாக இருக்கிறது என் அறிவு.

ஒருவர் அனுபவம் பிறருக்கு பயன் படாது, புதிய புதிய விளக்கங்களை தந்துகொண்டு இருப்பதுதான் அனுபவம், நேரம் வரும் - அதுவாக உன்னை வந்து சந்திக்கும், அதற்காக நீ காத்து இருக்க வேண்டாம். கண்டிப்பாக சொல்லி விட்டான். எனக்கு மட்டும் கோபந்தான் நண்பன் மீது. (விரக்தி மனப்பான்மையோடு).

வீதிவழியே நடந்து வருகிறேன். எதிரே ஒருவன் யாரோ ஒருவன் ஓடி வருகிருன். அவனை துரத்தியவாறே வெகு தூரத்தில் ஓடி வந்துகொண்டு இருக்கிறது, ஒரு கூட்டம். ஓடிவந்தவனுக்கு வழிவிட்டு நான் விலகிநிற்கிறேன், ஓடி வந்தவன் மறைந்துவிட்டான். அவனைத் துரத்தி வந்தகூட்டம் என்னை சூழ்ந்துகொண்டார்கள்– "இவன்தான்" யாரோ அந்த கூட்டத்தில் ஒருவன் என்னை அடையாளம் காட்டினன். "இவனேதான் திருடன்" கூட்டத்தில் மற்ருெரு குரல் என்னை சுட்டி காட்டுகிறது. "திருடனில்லை நான்" என்ற எனது வாதம் அவர்கள் காதில் விழவில்லை. ஆனல் அவர்கள் செவிடர்கள்

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ குர்தாக்கள்
★ பெல் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை-8.

இல்லை. "பொய் சொல்கிறான்" இவன் என்ற கட்டத்தில் அந்த ஒரு மித்த கூட்டத்தின் முன், நான் முழு மடையனுக்கப்பட்டதென்னவோ உண்மைதான். நல்ல காலம் போலீசாருக்கு என் நிலமை புரிந்தது, வீட்டுக்கு வந்தேன்.

முதல்அனுபவம் - கசப்பாகத்தான் இருந்தது. ஜீரணிக்க முடியாத கடின பதார்த்தம்தான்.

**திருடன் :—**

உண்மையின் பொருளை எனக்கு உணர்த்தினன்.

அவனுக்கு எனது நன்றி.

**உலக மக்கள் :—**

குரங்கில் இருந்து பிறந்தவர்களாம். அது மட்டுமல்ல. செம்மறியாட்டு கூட்டத்திற்கும் அவர்களுக்கும் சம்மந்தம் இருக்கவும் செய்கிறது. அதை அவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது மறக்காமல் நினைவு படுத்துகிறார்கள். விழித்தெழுந்தேன். மாடியில் நின்றவாறே கவனிக்கிறேன். உலகம் இயங்க ஆரம்பித்து விட்டது எத்தனைவிதமான மனிதர்கள். விதவிதமான எண்ணங்களை ஏற்றுச் சென்றவண்ணம் செல்கிறார்கள். அதோ அவன், ஆம் நேற்று ஓடி மறைந்தானே அவனும் சந்தடி சாக்கில் எங்கோபோய்க் கொண்டிருக்கின்றான். அவனை அழைத்தேன். வந்தான். நேற்று ஓடி மறைந்தாயே ஏன்? ஏன் என்றேன். அவனே சொல்கிறான்.

செய்தது குற்றமல்ல ஐயா, என் செயலுக்கு திருடன் என்ற குற்றம் சாட்டப்பட்டது. எனக்கொரு காதலி உண்டு, அந்தி நேரத்தில் அவளை சந்திப்பதும் உண்டு, எங்கள் சந்திப்பு நிகழும் இடம் அந்த "அவளின்" தோட்டம்தான் நேற்று பிடிபட்டுவிட்டோம் கையும் களவுமாக - பயந்துவிட்ட நிலையில் செய்வதென்ன என்பது எனக்கு தோன்றவில்லை. பிடிபட்டுவிட்டால் நாங்கள் அவமானத்தை சந்திக்க நேர்ந்திருக்கும். ஆகவே அந்தக் கும்பலின் பிடியில் இருந்து ஓடினேன். கூட்டத்தினரே திருடன் என்ற பெயரை சூட்டிவிட்டார்கள். பொன்னை திருடவில்லை - பெண்ணின் இதயத்தை திருடியவன் நான். திருடன் என்ற பெயரை சூட்டி எங்கள் காதலை குழிதோண்டி புதைக்க முற்பட்டு விட்டார்கள். இது தானய்யா உண்மை. அவன் சலனமின்றி நிற்கிறான்.

சே, உண்மையை மூடி மறைக்க ஒரு கூட்டமே முற்படுகிறதே உண்மையை ஒத்துக்கொள்ளமுடியவில்லை. உலகத்தால் மாற்றுப் பெயர்வைத்து அதை கொலை செய்யத்துணிகிறது. உண்மையை உலவ விடவில்லை. உலகத்திற்கு இஷ்டமில்லை, அதை சாகடிக்கப் போராடுகின்ற மனங்கள் தான் அதிகம் இருக்கின்றன. ஆயினும் உண்மைக்கு ஒரு அமானுஷ்ய சக்தி இருக்கத்தான் செய்கிறது. ஆகவேதான் உலகத்தில் மூலைமுடுக்குகளில் புகலிடம் தேடிக்கொண்டு

தன் தலையை காத்துக் கொண்டு வாழ்ந்துகொண்டு இருக்கிறது. இதுவும் ஒரு அனுபவம்தான் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். அன்று உரக்கம் என்னை அழைக்கிறது. படுக்கையை விரிக்கின்றேன். என் அறைக் கதவைத் தட்டும் சப்தம் கேட்டு யார் இந்த இரவில் என்ற கேள்வியில் என் கதவை திறக்கிறேன். இருண்டு கிடந்த தாழ்வாரத்து விளக்கை போடுகின்றேன். மருண்ட விழி மதி முகம் நிதியாகப் பெற்றுளோ என்னவோ இளமையை அவ்வளவு செழிப்பு அவள் இளமையில் எழில் விசுகும் மலரன்ன மங்கை, தன்னிலை கொள்ளாமல், தவித்திட்ட நிலையில் தஞ்சம் கோருகிருள்.

நீயார்? இது எனது கேள்வி.

மன்னியுங்கள் நான்யார் என்பதை பிறகு சொல்கிறேன். என்னை உள்ளே அனுமதியுங்கள் பரபரப்புடன் தஞ்சம் கேட்கிருள். பெண் என்ருல் பேயும் இறங்கும் என்பார்கள். நான் என்ன பேயா? தாராளமான என் அனுமதியுடன் உள்ளே வந்தாள். கதவை மூடுங்கள். அவளின் பரபரப்பான பேச்சில் எதையோ ஒரு நியாயத்தைக் கண்டுவிட்டவன் போல நானும் அவளின் உத்தரவை நிறைவேற்றினேன். என் அறைக்கு திரை இல்லை. என் கண்களுக்கும் அவளின் அழகை ரசிக்காமல் இருக்கும் திறமையும் இல்லை. மழையில் நனைந்த உடை, அவளின் இளமைகளின் எழுச்சியை விட்டு விட்டு வெளிச்சம் போட்டு காட்டுகின்றன. முட்டை முகம், பிறை நிலா நெற்றி, நில்லாமலும் நிலைக்காமலும் சுழன்று கொண்டு இருக்கும் கண்கள், பாலை பழிக்கிறது அவளின் பல்லின் வெண்மை. தேனைப் பிழிகிறது அவளது சொல்லின் இனிமை, சற்றே விலகிச் சென்று தன் மேலாடையைத் தனியே கையில் எடுத்து தண்ணீரைப் பிழிகிருள். அவள் இளமையை என் கண்களுக்குப் பரிசாகப் படைக்கின்ருளோ? கேட்கிறது என் உணர்ச்சிகள். நனைந்த முடி அதிலும் ஒரு தனி அழகே, பிழிந்திடுவது அவள் மேலாடையை அல்ல. என் இதயத்தை, பூரித்து பொங்கி வழிந்துகொண்டிருந்த அந்த இளம் அங்கங்களின் அசைவில் என் இதயம் அலாதியானதோர் அபிநயம் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. கட்டப்பட்டிருந்த கச்சை மழை நீர் இருக்கத்தை அதிகமாக காட்ட முற்பட்டது. அது மாத்திரமல்ல இளமையை தன் முழு வலிமையையும் வரிந்து கட்டிக்கொண்டு அந்த மெல்லிய கச்சையில் இருந்து விடுபட துடியாய்த் துடிக்கின்றது. என் நெஞ்சமோ படபடக்கிறது. இனம்தெரியாததவிப்பில் இருந்து மீளவேண்டும் அவளைப் பார்க்கிறேன், இளமையோ இதோ இருக்கிறேன் என்று தன் வாலிப வனப்பைக் காட்டவும் துணிந்துவிட்டது. என் உணர்ச்சிகள் வெறித்தன்மையை அடைந்துவிட்டன. ரத்த நாளங்கள் முறுக்கேறிக் கொண்டு தன்னை ஏதோ ஒரு செயலுக்கு தயார் செய்துகொண்டு இருக்கிறது. ஆசை அலை அலையாக எழுந்து விட்டது, கவிஞர் கண்ணதாசன் சொல்வதைப் போல ஆசை தனது ஆயிரம் கைகளையும் நீட்ட ஆரம்பித்துவிட்டது. போதும் என்ற நிலை மறந்தேன். மீண்டும் முடிவான நிலைக்கு வந்துவிட்டேன். அவளை அப்படியே கட்டிப்பிடிக்க துடிக்கிறது ஆசை. என் அனுபவம் மின்மை அதற்கு துணியமறுக்கும் கோழையாகி விடுகிறது. விடவும் மனமில்லை. தொடவும் மனமில்லை. புதிய அனுபவமில்லையா? வெற்றி கொள்ளவேண்டும் என்ற ஆசையில் என் பேச்சை ஆரம்பித்தேன். இப்போதுதான் அவளும் தன் ஆடையை சரிசெய்து கொண்டாள். ஆமாம் நீ யார் என்று சொல்லவில்லையே? இந்த இரவில் எங்கிருந்து வந்தாய்? எதையோ ஆரம்பிக்கப் போய் எதையோ கேட்கிறேன். புரியாமல் இல்லை எனக்கு. இருந்தாலும் முதலில் நியாயமாக கேள்விகளைத்தான் கேட்க வேண்டும். அவளின் பதிலை வைத்து நம் நியாயங்களை அவள் முன்பு வைப்போம் என்ற நினைப்பில். இரண்டாம் சினிமாவுக்குப் போய்க் கொண்டிருந்தபோது முரடன்ஒருவன் என்னை தொடர்ந்திட்டான். என் இளமையை அழிக்க முற்பட்டான். ஆகவே தான் உங்களிடம் அடைக்கலம் கோரினேன், அவள் குரலில் ஒரு தனி பாணியைக் கண்டேன். அந்த பாணியிலும் ஒருதனி இனிமையை கண்டேன்.

சற்று முன்பிருந்த வேகங்களும் காம இச்சைகளும் கல்லெறிகளுக்கு பயந்தோடும் வெறிநாய்களைப்போல பின்னேக்கிப் போய்க் கொண்டிருந்தன. ஈனத்தனமாக என் எண்ணங்கள் அவள் பதிலால் தலைகுனிந்து ஊமையாகிவிட்டது.

நான் கேட்டது நியாயமான கேள்வி, அவள் சொல்லியதோ சிக்கலான பதில். பிரச்சனையைப் பெற்றெடுத்து விட்டது மனம். விடை காண நினைத்தேன். என் உணர்ச்சிகளுக்குத் தடை போட்டு விட்டது அவளின் விடை, என் எண்ணங்களுக்கு.

தன் கற்பை காப்பாற்றிக் கொள்ள என்னிடம் தஞ்சம்கோரினுள். அதே கற்பை அவளிடம் அழிக்க முற்படுவதா? கேள்வி எழத்தான்செய்தது. இருந்தாலும் என் உணர்ச்சிகளுக்கு பதில்சொல்லக்கூடிய வலிமை எனக்கில்லை. ஆசை வெட்கம் அறியாதது என்பார்களே அந்த நிலையில் அவளின் கைகளை துணிந்து பிடித்துவிட்டேன். ஏதோ ஒரு உணர்ச்சியில். விளக்கை அணையுங்கள் அவளின் பதில் எனக்கு ரீங்காரமாக இருந்தது. விளக்கு அணைக்கப்பட்டது. இத்தனை நாள் விளக்கப்படாத நிகழ்ச்சிகளுக்கு விடை தேட இருவரும் முற்பட்டோம். உணர்ச்சி எனக்கு உற்ற துணை. பூனையின் கண்கள் இருட்டிய ஒளியுள்ள விளக்கைப் போல் தோன்றுமே அதைப் போல உணர்ச்சி எனக்கு இன்பம் இருக்கும் இடத்தை காட்டிவிட்டது. விளையாட்டை பள்ளிப் பருவத்திலே ஆடி இருக்கிறேன். மஞ்சத்திலும் விளையாட்டு உண்டு என்பதை விளக்கி விட்டாள். உறக்கத்திற்கு வேலைஇல்லை, பாவம் அதுசோர்ந்து

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதி யில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


போய் எங்கோ ஒரு மூலையில் முக்காடிட்டுக் கொண்டு விட்டது. பறவைகள் படபடக்கிறது. விடிந்துவிட்டதே இவ்வளவு சீக்கிரம் என்கிறது என் மனம். சென்று வரட்டுமா? வெளிச்சம் வரும் முன்னே என்கிறாள்.

பிரிய மனமில்லைதான் என்ன செய்வது, சலிப்போடு சரி, மீண்டும் எப்போது எங்கே என்றேன்?

நீங்கள் எப்போது எங்கே சொல்கிறீர்களோ அங்கே அப்போது என்கிறாள். கைசெலவுக்கு நாற்பது ரூபாய் வேண்டுமென்கிறாள். அவளின் வினயம் எனக்கு எதையோ குறிப்பாக காட்டுகிறது. இரவு நம்முடன் கழித்த காலத்திற்கு வாடகை ரூபாய் நாற்பது கேட்கிறாள். மிக்க சாமர்த்தியசாலி தான். அவளின் சுய தரிசனம் எனக்கு இப்போது கிடைத்து விட்டது.

நான் என்ன நினைக்கிறேன் என்பதைப் புரிந்து கொண்டவளாக "பின்னே சும்மாவா கிடைக்கும் கன்னியின் மஞ்சம்" கூசாமல் கேட்கிறாள்.

நானும் கோபிக்காமல் நிக்கிறேன், யோசிக்கிறேன். குற்றம் நம்முடையது தான் என்பதை உணர்ந்தேன். ஐம்பது ரூபாய் கொடுத்தேன். சென்று விடு நீ, இனி இங்கு வராதே என்றேன், "உலகத்தில் நீ ஒரு ஆள்தான் ஆம்பிளைன்னு நினைப்பா" அவள் பாஷையை பேச முற்பட்டாள். இப்போதும் எனக்கு கோபம் வரவில்லை.

நடந்ததை நண்பனிடம் சொன்னேன்.

"இதுதான் உலகம்" என்ற முடிவிற்கு வந்துவிடாதே. இது ரசமான அனுபவம். இன்னும் பல அனுபவங்கள். பல கோணங்களில் விளக்கிட காத்துக் கொண்டிருக்கின்றன. இதைப் பொருட்படுத்தாதே என்கிறான். காதலே கிடைக்காதா? இது என் கேள்வி, ஏன் இல்லை அது எங்கோ இருக்கிறது. இருக்குமிடம் கண்டுபிடிப்பதுதான் கஷ்டம். அவ்வளவு கடினமான இடத்தில் இருக்கிறது என்கிறான். காமம்தான் இன்றைய உலகின் முதற் பொருளா? தொடர்ந்தேன். அதற்குப் பதில் உன்னாலேயே சொல்ல முடியுமே நண்பனின் பதில் பிரிந்துவிட்டது. காமத்தைப் போதித்து காதலை விளக்க முற்பட்டாளே அந்த கணிகைக்கு என் நன்றி.

# அவள் ஒரு மொட்டு

அந்த அறையில் கலீர் கலீர் என்று ஓசை எழுந்த வண்ணமாக இருந்தது. ஆடலரசி அனிதா அபிநயம் பிடித்துக் கொண்டு இருக்க, நாட்டியம் கற்றுக்கொடுக்கும் குமார் பதம்பாடிக் கொண்டு இருந்தான்.

ஆனால் அவனுடைய கண்களோ...அவளுடைய அங்க அசைவுகளில் நோட்டம் விட்டவாறு இருக்கக் காரணம் அவள் ஒரு புது மொட்டு. அரும்பின் அழகினை காணமட்டும் செய்யாமல் அதனை அனுபவித்துவிட வேண்டும் என்ற எண்ணமும் தலைதூக்கி நிற்கவே...

விரல்கள் அபிநயம் பிடிக்க விழிகள் பாவம் பேச உடல் வளைந்து உணர்ச்சிப் பரவசமூட்ட தன்னை மறந்து கலை வசமானாள் அவள்.

குமாரியின் வாய் பதம் பாடிக்கொண்டு இருந் தாலும் அவளுடைய எண்ணமெல்லாம்...நாட்டிய விற்பன்னன் மனதில் எழும் எண்ணங்கள் விரக தாபத்தை மூட்டிவிடும் அளவிற்கு உயர்ந்து அல்லவா இருக்கிறது. அவனுடைய வயதுக்கும் திறமைக்கும் ஏற்ற தொழில்தான் இது.

நாட்டியம் கற்றுக்கொடுக்கிறேன் என்ற போர்வையில் பெரிய இடங்களில் கன்னி கழியாத கனி மொட்டுகளை சுவைத்து அனுபவித்து விடுகிறான். அவனுடைய கைப்பட்டு மலரும் மணம்தான்... மற்றவர்கள் அனுபவிக்க வேண்டிய நிலை.

இப்படி செய்தால் நாட்டியம் கற்றுக் கொள்ளவே முடியாது என்று கூறி படக்கூடாத இடங்களில் எல்லாம் கைப்பட்டு கலையைக் கற்றுக் கொடுப்பதின் மூலம் அதனை மறக்கச் செய்து திருவிளையாட்டை விளையாடிக்கொண்டு இருந்தான். இளமை துணை செய்தது...

கொடிபோல் அசையும் கோலச் சிற்றிடைமேல் செழித்து சிவந்திருந்த இரண்டு மதுக்கலசங்களை அவனுடைய போதை விழிகள் உண்டு உண்டு மேலும் மேலும் போதை கொண்டன. வில்லொத்த புருவத்தில் அவள் விழியினின்றும் நாணேற்றிய பார்வை எனும் கணை தொடுத்தபோது அதன் தாங்கமுடியாமல் தலை...

விழிகள் சதிராடின பாதங்கள் பதம்பாடின. சதங்கை கலீர் கலீர் என கலகலத்தது, மங்கையின் கையிலே இருந்த மலர் மன்னனுக்கு மாலையாக வந்திருக்கிறது...

கலீர் கலீர்...

நாட்டியத்தை நன் முறையில் ஆடிக்கொண்டு இருந்தாள். சில நிமிடங்கள் கழித்த பின்பு அவள் மீண்டும் வேறு பாவத்துடன் ஆடவேண்டும். அதற்குள்...

அந்த இடைவெளிக்குள்...

அவனுடைய ஆசை அதிகரித்தது.

மோகத்தின் வேகம் விடவில்லை அதன் பயன்—

மேனியின் மேதினியின் சோபிதத்தையும், கண்களில் நிலவொளியையும், புன்னகையில் பொன் தகட்டில் புதைத்த வைரச் சித்திரத்தையும், ஆனந்தம் ஊட்டும் பேச்சிலே அபிமான சிந்தாமணியை, காலத்தின் கனியை, காண துடித்துக் கொண்டு இருக்க—

அவளோ

ஆடிய களைப்பில் அயர்ந்து உட்கார்ந்து விட்டாள்.

பட்டுடை உடுத்தி பரிமளம் பூசி கண்ணை பறிக் கும் வனப்பைக்கண்டு வானுயர புகழ்ந்து வாயிலுக்கு வரும்படி அழைத்து கன்னியை கசக்கி பிழிந்து கனி நிறைவைக் காண...

நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்...

"இதற்குள் இப்படி களைப்பாகி விட்டாயே... அடுத்த நாட்டியத்தை தொடங்கலாமா" என்று அன்பு ததும்பும் பேச்சில் அவளை வளைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் 'எழுந்திரு' என்று கூறி... அவளைப் பிடித்து தூக்கும்—சமயத்தில்...

உச்சி முதல் உள்ளங்கால்வரை உள்ளமும் உடலும் உரசி புளகாங்கிதமுற்று பரிமளப் பஞ்சணை யில் குமுகுமுவென குரலொலிக்கத் தகதகவெனப் பொன் ஜொலிக்க கிலுகிலுவென வளை ஒலிக்க விடுவிடுவென அவள் கதற இரு இரு என்று அவன் இயம்ப கோலாகலமாக கோமளவல்லியின் வனப்பை இன்பத்தை பெற்று விட்டான்.

இன்பத்தை பெற்று முடிந்ததும் அவனால் எழுந்திருக்க முடியவில்லை. அவளுடைய விருப்பம் இல்லாமலே அவன் பலாத்காரமாக முயன்றபடியி னால் அருகில் இருந்த கத்தியை அவன் உடலில் பாய்த்து விட்டு தானும் அதில் கலந்து விட்டாள்.

இளையாளை வாட்டி இணைவிழி கூட்டி, உள்ளத் தில் விரகதாபத்தை மூட்டி மதுரமொழி வீசி புன்சிரிப்பை மதி முகத்தில் தீட்டி மங்கையின் மலரடி தடவும் குறிப்பறிய வேண்டி கோதையரின் கூந்தலை கோதுவதுமாக உள்ள வேலைக்கு முற்று புள்ளி வைக்கச்செய்து விட்டாள்.

இ. எஸ். மெர்வின்

# நீங்துவதோ நல்லநெறி?

டாக்டர். சாலை இளந்திரையன் எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

சமுதாயத் தீங்குகளுக்கு எதிர்சென்று ஏறி அவைகளை அழிக்காமல், அவைகளைக் கண்டு ஒதுங்கி விடுவதே நமது சமுதாயத்தின் நடைமுறையாக இருந்து வந்துள்ளது. தீமை ஒழிக்கப்பட வேண்டும்,—நன்மை ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதே பொதுவான மக்கள் நாட்டமாக இருப்பதால், நமது மக்களின் நழுவல்நெறி நமக்கு வியப்பையும் ஒருவித மான அதிர்ச்சியையும் கூடத் தருகிறது. ஆயினும், தமிழ்ப் பழமொழிகளையும் அவற்றின் குரலுக்கு ஒத்துப்போகும் மற்றச் செய்திகளையும் அலசிப் பார்க்கையில், நமது மக்களின் மீது கோபம் கொள்ள முடியவில்லை.

## இடக்கனுக்கு வழி எங்கே?

பழமொழிகளில் படர்ந்து காணும் மக்களின் மனப்பான்மை, தனித்த நூலாசிரியர் மற்றும் சிந்தனையாளர்களின் மனப்பான்மையினின்று பெரிதும் வேறுபட்டது. அவர்களின் குரலில் உள்ள இலட்சிய நோக்கையோ பிரச்சார மிடுக்கையோ பழமொழியில் காண முடியாது. மக்கள் கண்டனவும் கேட்டனவுமான எதார்த்த நடையையும், அதற்கு ஏற்ப, அவ்வப்போது அவர்கள் நெஞ்சில் எழும் எதிரொலிகளையும் அப்படியே பதிந்து வைத்த நாடாப் பதிவே பழமொழி.

'உடையவனிற் கைப்பற்றினவன் மிடுக்கன்' என்று ஒரு பழமொழி சொல்லும்போது, பறித்துக் கொண்டவனே பெரியவன் என்பது பொருளல்ல; ஆனால், இவனைத்தான் உலகம் கெட்டிக்காரன் என்று சொல்லுகிறது என்ற எதார்த்த நிலையையே நமக்குச் சொல்லுகிறது பழமொழி. "கொழுத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு;—ஏடாகூடகாரனுக்கு வழி எங்கே?என்றால் போகிறவன் தலை மேலே;—(குண்டா மண்டிக்காரனுக்கு வழி எங்கே, குந்தியிருக்கிறவன் தலை மேலே!);—இடக்கனுக்கு வழி எங்கே, கிடக்கிற வன் தலை மேலே;—கட்டினவனுக்கு ஒரு வீடு கட்டாதவனுக்கு ஊரெங்கும் வீடு" முதலியன எல்லாம் இதே விதமாகக் குரல் கொடுக்கும் பழமொழிகளே.

"தன்பணம் செல்லாவிட்டால் தாதனைக் கட்டி அடிக்கிறது" என்னும் பழமொழி, "பழி ஓரிடம் பாவம் ஓரிடம்" என்பதை மட்டுமல்லாமல், வசதியும் வாய்ப்பும் உடையவர்கள் தங்களினும் தாழ்ந்தவர்களை எப்படி நடத்துகிறார்கள் என்பதையும் காட்டுகிறது. தமிழின் முதல் நாவலாகிய பிரதாப முதலியார் சரித்திரத்தில் இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி வருகிறது. கதைத் தலைவன் பிரதாபனின் பாட்டி, அவனுடைய ஆசிரியரை அணுகி, "என் பேராண்டி பிரதாபனுக்குப் படிப்பு வராவிட்டால் உம்முடைய பையனை அடியும்; அதைக் கண்டு பயந்து என் பேராண்டி படிப்பில் கவனம் செலுத்துவான்" என்கிறாள்! வாய்ப்பு உள்ள தீங்கினரின் இத்தகைய வேடிக்கையான கொடுமையான மனப்பான்மையையே மேற்கண்ட பழமொழி சொல்லுகிறது. "பார்க்கக் கொடுத்த பணத்துக்கு வெள்ளிக் கிழமையா?" என்னும் பழமொழியும் இந்த மனக் கொடுமையின் ஒரு கிளையையே புலப்படுத்துகிறது. 'இந்தப் பணம் செல்லுமா என்று பார்த்துச் சொல்லுங்கள்' என்று ஒரு (படித்த பெரிய)வனிடம் பணத்தைக் கொடுத்தான் ஓர் அப்பாவி. அந்த மனிதனோ, அதை வாங்கிக் கொண்டு, "இன்றைக்கு வெள்ளிக் கிழமை, வெள்ளிக்கிழமைகளில் நான் பணம் கொடுக்கல் வாங்கல் செய்வதில்லை;—போய்விட்டு நாளை வா" என்றான். வலுத்தவன், மற்றவனைக் கொள்ளை அடிப்பதற்கும் தள்ளி மிதிப்பதற்கும் இது தான் அளவு என்று கிடையாது என்பதையே இந்தப் பழமொழி உணர்த்துகிறது.

## செல்லம் சருக்குதா?

இதுபோன்ற போக்குகள், ஏன் சமுதாயத்தில் வளர்ந்தன என்பதையும் பழமொழியாளர் எண்ணிப் பார்த்திருக்கிறார்கள்: 'செல்லம் சொல்லுக்கு அஞ்சுமா?' என்னும் பழமொழி சமுதாயக் கேடுகளின் பிறப்பிடம் ஒன்றைச் சுட்டிக் காட்டுகிறது: அமைகிற சூழ்நிலைக்கும் கிடைக்கின்ற வாய்ப்புக்கும் ஏற்பவே தங்கள் குழந்தை நல்லவனாகவோ தீயவனாகவோ வளர்கிறான் என்பதை உணராத பல பெற்றோர்கள்,—'பிள்ளைச் சீர் கொள்ளக் கிடைக்குமா?' என்ற மயக்கில்,—அதற்கு அளவு மீறிய செல்லம் கொடுத்து விடுகிறார்கள். 'தொடக்கமே நீச்சானால் நிலை எங்கே?' என்பது போல,—தொடக்கத்திலேயே கண்டிப்பும் கரைவரம்பும் இல்லாமல் ஓடுகிற பிள்ளை நாளடைவில் தீயவனாகவே உருவாகிப் போகிறான்.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு அல்லவா? செல்லம் மிஞ்சிப் போவதைச் சுற்றியிருப்போர் அவ்வப்போது, இனிமையாகவும் கடுமையாகவும் எடுத்துரைக்கிறார்கள்: "செல்லச் சக்கிலிப்பிள்ளை செருப்புச் செருப்பாய்த் தின்று கழிகிறது;—செல்லப் பிள்ளை சீலை உடுத்தாதாம் பிள்ளை பெறுமட்டும்;—செல்லம் சருக்குதா, வாசற்படி வழுக்குதா?;—செல்லம் சீரழிக்கும்; செல்லத்திலே ஒரு பெண் பிறந்து செட்டித்தெருவெல்லாம் நொட்டிவிட்டு (திரிந்து விட்டு) வந்தது! என்றெல்லாம் எழுந்து ஒலிக்கும் அனுபவக்குரல் எல்லோர் காதிலும் கேட்பதில்லை. எனவே, அளவு மீறிய செல்லம் கொடுப்போர், அவர்களை அறியாமலே தங்கள் பிள்ளைகளைத் தீயவர்களாக ஆக்கி விடுகிறார்கள்.

## போரோடு தின்கிற மாட்டுக்கு...

இப்படி வாழ்வைத் தொடங்குவோர்க்கும், போகப் போக நல்ல சூழ்நிலை அமைந்தால் அவர்கள்

திருந்த வாய்ப்பு உண்டு; அதைப் பெருதவர்கள் மேலும் தீயவர்களாகவே ஓங்குகிருர்கள்: "எதிரி இளப்பமானல் கோபம் சண்டாளம்;—தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்" என்பன இத்தகைய வளர்ச்சிச் சூழ்நிலையைச் சித்தரிக்கும் பழமொழிகள்.

"ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும்" என்று நினையாமலே டாம்பீக வாழ்வு நடத்தத் தொடங்கிவிடும் தீயவர்கள், பிறகு எந்த நிலையிலுமே தங்களைத் திருத்திக் கொள்ள முடிவதில்லை. கொள்ளையடித்தே ஆடம்பரம் பண்ணிப் பழகி விட்டவர்கள் முறையாகச் சம்பாதித்து நெறியோடு வாழ்வது எங்கே? "போரோடு தின்கிற மாட்டுக்குப் பிடுங்கிப் போட்டுக்கட்டுமா?" என்னும் பழமொழி இந்த நிலையைத்தான் சுட்டிக் காட்டுகிறது. இந்த நிலையை எட்டியதும், அவர்கள், தலைக்குமேல் போவது சான் போனல் என்ன முழம் போனல் என்ன?" என்று பெரும்போக்காக முடிவு செய்துகொண்டு, கெடுநடையையே முடுக்கத் தொடங்கி விடுகிருர்கள். (தலைக்கு மேலே சான் தண்ணீர் போனல், இரக்கமுள்ள யாராவது குடுமியைப் பிடித்தாவது தூக்குவார்கள்,—முழம் தண்ணீர் போனல் அப்படிக் கூட யாரும் உதவி செய்ய முடியாது என்பது, பாவம், இவர்களுக்குத் தெரிவதே இல்லை!)

"அப்பனேடே(யே) போகிறவனுக்கு அண்ணன் ஏது தம்பி ஏது?" என்பது போல, தீமைத்தனத்தின் தொடக்கப்படிகளையும், திருந்தி வளர்ந்துகொள்ளக் கிடைத்த இளமையையும் தாண்டிவிட்டவர்கள், அதன் பிறகு நல்ல வழியின் பக்கம் நடைதிருப்பவே முடிவதில்லை. அவனுடைய நடைத்திசை, "சூடு சொரணையற்றவனுக்கு நாடுநகர் பெரிதா?;—(மான உணர்ச்சி இல்லாதவன் பண்பாட்டுக் கரைகளை மதிக்கவா போகிருன்?) கொலைக்கு அஞ்சாதவன் பழிக்கு அஞ்சுவானு?;—அதிரம் தடித்தாருக்கு அய்யனுமில்லை, பிடாரியுமில்லை!" என்னும் பழிப் பட்டயங்களையே அவனுக்குப் பெற்றுத் தருகிறது.

## தின்னப் படையுண்டு...

இளமையிலேயே அவனைத் திட்டி மடக்காத பெற்ருேரும், அவனுக்கு வழிவிட்டு வழிவிட்டு அவனைத் தீங்கிலே முதிரவிட்ட ஊராரும் இப்போது அவனுக்கு ஏற்பட்டுவிட்ட வலிமையையும் துணையையும் கண்டு அதிர்ச்சி அடைகிருர்கள். அவன் அடித்த கொள்ளையிலே பங்கு பெற்றும், அவனுடைய விரைந்த வளர்ச்சியைக் கண்டு வியப்புற்றும், அவனை எதிரிட்டுக் கொள்ள அஞ்சியும், ஒரு கணிசமான பகுதியினர் இப்போது அவன் பக்கம் சேர்ந்து நிற்கிருர்கள். அங்கே, எத்தனையோ பழமொழிகள் பிறக்க இடமிருந்தும், "தாயைக் கொன்றவனுக்கும் ஊரிலே பாதிப்பேர்!" என்ற வியப்பு வேதனைப் பழமொழியே பிறக்கிறது. ஏனெனில், இப்போது, அவனை அழிப்பது என்று நினைப்பதே கூட இயலாததாகி விட்டது!

"இளைதாக முள்மரம் கொல்க, களையநர் கைகொல்லும் காழ்த்த இடத்து" என்றது குறள். ஆனல், உலகம் இதை எல்லாம் கவனிப்பதில்லை; முள்மரத்தை வளர விட்டுவிட்டு, அது எல்லா இடமும் படர்ந்து அடைத்த பிறகே கையைப் பிசைகிறது. எனினும், இடையருது வளர்ந்துவரும் மனிதச் சமுதாயம், இப்படியே முள்மரங்களால் மூடுண்டு போகிறது என்று நினைக்க முடியாது: அவ்வப்போது, தீங்குக்கு எதிரான குரலை அது எழுப்பத்தான் செய்கிறது. சிலபோது அந்தக் குரல் எடுபடுகிறது; பலபோது அது எடுபடுவதில்லை.

சமுதாயத் தீங்காக வளர்ந்துவிட்டவனிடம் பணம் சேர்ந்தது; அதுவே அவனைச் சுற்றி ஆளையும் சேர்த்துவிட்டது. கூரையிலே சோறு போட்டால் ஆயிரம் காக்கை அல்லவா? அவனை எதிர்த்து அழிக்கப் புறப்படுகிறவனும், தன்னல் ஆனவரை பார்த்துவிட்டு, ஒன்றும் முடியாதவனுக (இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட வேண்டுமானல்,) "பணம் இருக்க வேணும், இல்லாவிட்டால் பத்துச் சனம் இருக்க வேணும்" என்ற முடிவுக்கே வருகிருன். வெறும் நல்லெண்ணமும் அதன் விளைவான செயலார்வமும் மட்டுமே தொடர்ந்து தீமையை எதிர்த்து நிற்கும் வலுவைத் தருவதில்லை என்பதைக் காணும்போது, அவனே, "சனப்பலம் இருந்தால் மனப்பலம் வரும்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்ளுகிருன், இப்படிப்பட்ட சமயங்களில், உற்ருர் உறவினரும் ஒன்று சேருவதில்லை என்பதைக் காணும்போதுதான், முனைப்புடைய அந்தத் தனி மனிதனின் உள்ளம் கசப்படைகிறது. எவ்வளவோ காரியங்களுக்குத் தன் உதவியைப் பெற்றவர்களான தன் உறவினர்கள், இப்படி ஒரு முக்கியமான கட்டத்தில் உதவவில்லையே என்ற ஏக்கக் கசப்புதான், "தின்னப் படையுண்டு வெல்லப் படையில்லை;—ஊசி ஒரு முழத் துணியாவது கொடுக்கும் உற்ருர் அதுதானும் கொடார்கள்!" என்னும் பழமொழிகளாக வெளிப்படுகிறது...

## நல்ல மரத்திலே நரையான்...

நமக்குக் கிடைக்கிற பழமொழிகளைக் கொண்டு கவனிக்கையில், சமுதாயத்தில் தோன்றும் தீமையை ஒழிக்க வேண்டும் என்ற முனைப்பு நமது மக்களிடம் இருந்திருப்பதாகவே தெரிகிறது. அந்த முனைப்பு போதிய வீறுடையதாகவும் நீடித்துச் செயல்புரிவதாகவும் அமைந்து விடாதபடி, இங்கே "இடைநிலை"யினரே மிகுதியாக இருந்திருகின்ருர்கள். அதன் காரணமாக, தீயவனை எதிரிட்டுக் கொள்வதைவிட அவன் கையிலும் கண்ணிலும் அகப்படாமல் நீங்குவது நன்று என்னும் எண்ணம் ஒன்று ஏற்பட்டு, அதுவே இந்தப் பழமொழிகளால் சித்திரிக்கப்படும் தமிழ் மக்களின் வாழ்க்கைநெறியாக நிலைத்து விட்டது என்றும் தோன்றுகிறது. வீரத்திற்குப் பேர் போனவர்களாக ஒருகாலத்தில் விளங்கியுள்ள இம்மக்கள், தீமைக்கு இடங்கொடுத்து விலகிப் போக நேர்ந்ததற்குரிய காரணம் என்ன என்பதைப் பழமொழிகளின் வாயிலாகத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியவில்லை... ஆனல், நல்ல மரத்திலே நரையான் விழுந்ததுபோல,—வீரத்துக்கே இலக்கியமும் இலக்கணமுமாக நடைபெற்ற தமிழ் மக்களின் வாழ்வில், இப்படி ஒரு நழுவல்தனம் எப்படியோ வலுவாக வேர்க்கொண்டு விட்டது என்பது மட்டும் பழமொழிகளில் தெளிவாகத் தெரிகிறது.

(குறிப்பு: டாக்டர் பட்டத்துக்கு எழுதிய ஆங்கில ஆய்வுரையின் சில கருத்துக்களைத் தழுவி எழுதப் பட்டது.)

# கவிதைப் பூங்கா

## பேதை நெஞ்சே!

(பாவலர் கருமலைப் பழம்நீ)

★

பெண்ணழகை தினம்நாடி பகலிரவாய் அலைகின்ற
பேதை நெஞ்சே!
கண்ணழகு; முகவழகு; மார்பழகு; தொடையழகு;
கண்டு நாளும்,
உண்டுறங்கி வாழ்நாளை கழித்துவிட்டால்
உள்ளங் கெட்டுத் [பின்னாளில்,
திண்ணையிலே தனியாகி சென்றஅந் நாள்நினைந்து
தேம்பத் தானா?

கண்டபடி அலைகின்ற காற்றைப்போல் பலநினைவில்
கருத்தை யோட்டி
உண்மைநிலை உணராமல் பிறர்மனைமேல்
ஊமை நெஞ்சே! [விழிபதிக்கும்,
எண்ணிப்பார்! உன்தாயை! உடன்பிறந்த
ஏங்கும் நின்றன் [பெண்வடிவை!
கண்ணுக்குத் தெரியவில்லை? பெண்தெய்வ
காமப் பேயே! [ஒளிவெள்ளம்?

பருவத்தில் தேடிக்கொள்! துணையொன்றை!
பள்ளி தன்னில் [மெய்க்காதல்
இரண்டுள்ளம் ஒருள்ளம் எனவொன்றி, சான்றோரை
எழுப்பு வீட்டில்!
பருந்தாக வட்டமிடும் நினைவகற்றி பெண்முகத்தைப்
பாராய் நெஞ்சே!
அருளெல்லாம்; அன்பெல்லாம்; பண்பெல்லாம;
அமைந்த தன்றோ? (ஒன்றாகி,

## மொட்டுடல் மலர...!


(கவிஞர் பி. சி. அசனல்லி)

சிட்டுஎனை நாடி வந்தான்
சித்தம் மயக்க,—இந்தப்
பட்டுஇதழ்த் தொட்டு நித்தம்
முத்தம் பதிக்க!
கட்டுடலை அணைக்க வந்தான்
கவிதைப்பாடி,—இந்த
மொட்டுடலும் மலரத் தந்தான்
முத்தங் கோடி!

மெத்தையினைக் காட்டி நின்றான்
மோகம் விதைக்க,—இந்தக்
கொத்துமலர்த் தேனை உண்டான்
கூடிக் களிக்க!
அத்தைமகன் என்று சொன்னான்
அன்பைப் பதிக்க,—காதல்
தத்துவத்தைச் சொல்லி நின்றான்
தாவி யணைக்க!

நெஞ்சிலூறிக் கனவில் வந்தான்
நித்தம் வதைக்க—என்றும்
வஞ்சியென்றன் நெஞ்சில் நின்றான்
வித்தைப் படிக்க!
கொஞ்சிதினம் மஞ்சங் கண்டான்
கொத்திச் சுவைக்க—இந்தப்
பஞ்சுடலைப் பற்றி விட்டான்
பாசந் தெறிக்க!!

# நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாக தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் (போன்: 2979) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.